EASTERN UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2013/2014 (June 2017)

**GYS 2213 பொருளாதாரப் புவியியல் (Economic Geography)**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

பகுதி I இல் இருந்து மூன்று வினாக்களையும் பகுதி II இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி I

1. அ. பொருளாதாரப் புவியியல் என்றால் என்ன? பொருளாதாரப் புவியியல் கற்கையின் நோக்கம், உள்ளடக்கம் என்பவை தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

   ஆ) "எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் புவியியல் பரிணாமத்தை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்து வருகின்றது." என்ற கருத்தினை ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

2. அ) முதலாளித்துவப் பொருளாதாரம், சோஷலிசப் பொருளாதாரம் ஆகியவற்றின் தனித்துவமான பண்புகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

   ஆ) கலப்பு பொருளாதார் நடவடிக்கையில் அரசாங்கத்தின் பங்களிப்பு தொடர்பாக கருத்துரைக்குக. (05 புள்ளிகள்)

   இ) முதலாளித்துவப் பொருளாதாரம், சோஷலிசப் பொருளாதாரம் என்பற்றுக்கிடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

3. அ) வளம் (Resource) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

ஆ) வளங்களுக்கும் சனத்தொகைக்கும் இடையிலான சமச்சீரற்ற தன்மைகளை நாடுகளை உதாரணங்காட்டி விளக்குக. (06 புள்ளிகள்)

இ) வளப்பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதில் புதுப்பிக்கக்கூடிய வளங்களின் பங்களிப்பு பற்றி சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினுக்கு** விளக்கக்குறிப்புரை எழுதுக.

அ) முதலாம், இரண்டாம் நிலைப் பொருளாதார நடவடிக்கைகளில் புகுத்தப்பட்டுவரும் நவீனத்துவங்கள்

ஆ) ஆசியாவில் புதிதாக கைத்தொழிலில் வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒன்றான சிங்கப்பூரின் பொருளாதார விருத்தி

இ) போக்குவரத்துத் துறையில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள்

(10x2= 20 புள்ளிகள்)

## பகுதி II

5. அ) பொருளாதார நெருக்கடி என்றால் என்ன? பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான காரணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ஆ) "உலகபொருளாதார நெருக்கடியும் பிரச்சினைகளும்" என்ற தலைப்பில் கட்டுரை வரைக. (15 புள்ளிகள்)

6. "பொருளாதார கொள்கைகளில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் பொருளாதார அபிவிருத்தியில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன." இக்கூற்றை இலங்கையின் கடந்தகால பொருளாதார கொள்கைகளை (1948 – 2016) அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

7. இலங்கையுடனான சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியினால் இந்நாடு அடைந்துவரும் சாதக, பாதகங்கள் தொடர்பாக கருத்துரைக்குக.

(20 புள்ளிகள்)